

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.05.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள 108 அவசரகால சேவை மையத்தில், 2025 ஆம் ஆண்டு 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்குவதை ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலளார் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி. கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன், 108 மாநில செயல்தலைவர் செல்வக்குமார் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### பாகிஸ்தானின் தீவிரவாதத்திற்கு எதிராக போர் நடத்தும் நம்முடைய இந்திய ராணுவத்திற்கு ஆதரவு தெரிவித்து

# சென்னையில் முதல்வர் தலைமையில் இன்று நடைபெறும் பேரணியில் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் பங்கேற்பீர்!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



சென்னை, மே 10-

பாகிஸ்தானின் தீவிரவாதத்திற்கு எதிராக போர் நடத்தும் நம்முடைய இந்திய ராணுவத்திற்கு ஆதரவு தெரிவித்து சென்னையில் இன்று (10-ஆம் தேதி) மாலை முதல்வர் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் பேரணியில் காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

அண்டை நாடான பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கும் - தீவிரவாத தாக்குதல்களுக்கும் எதிராக வீரத்துடன் போர் நடத்திவரும், நம்முடைய இந்திய ராணுவத்தினருக்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமையையும், ஆதரவையும், வெளிப்படுத்தும் வகையில் இன்று 10-ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு, சென்னை கடற்கரைசாலையில் உள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் இருந்து நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் மாபெரும் பேரணி நடைபெறும் என்று அறிவித்துள்ளார்,

அப்பேரணி காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு தீவுத்திடல் அருகே உள்ள போர்நினைவுச்சின்னத்தில் முடிவடைகிறது.

நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலகட்டத்தில், இந்திய ராணுவத்தின் வீரத்தையும் - தியாகத்தையும் - அர்ப்பணிப்பையும் போற்றுவதற்கும், தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் நடத்தப்படும் இப்பேரணியில், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்று நமது ராணுவத்திற்கு ஆதரவு தெரிவிக்குமாறு நம்முடைய வீரமிக்கத் தலைவர் - மாநில சுயாட்சி நாயகர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்புக்கட்டளையிட்டுள்ளார்.

நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும், மாணவர்களும் - இளைஞர்களும் - மகளிர்களும் - முன்னாள் இராணுவத்தினரும், இன்று 10-ஆம் தேதி மாலை 4.00 மணிக்கெல்லாம், சென்னை கடற்கரை சாலையில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பேரணியில் பங்கேற்பது "நமது உரிமை", "நமது கடமை" என்ற அந்த லட்சிய உணர்வோடு கழகத்தினரும், மக்களும் ஓரணியில் திரண்டு பங்கேற்று நம்முடைய ஒற்றுமையையும், உறுதியையும் நாட்டிற்கு காட்டிடுவோம் என்று வாரீர் ! வாரீர் !! என்று அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### தலைமை: கெ. ஞானசேகரன்! உத்திரமேரூர் ஒன்றிய – பேரூர்க் கழகம் சார்பில்

# கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. – த.ஜெயராமன் – க.செல்வம் எம்.பி. சிறப்புரை!

சென்னை, மே 10

மாநில சுயாட்சியை மீட்டெடுத்த சரித்திர நாயகர், இந்தியாவின் தலைசிறந்த முதல்வர்களில் முதல்வர் பவள விழா காணும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் கழக அரசின் நான்காண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (10.05.2025 சனிக்கிழமை) மருதம் ஊராட்சியில் மாலை 5 மணிக்கு நடைபெற உள்ளது.

ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய குழு உறுப்பினர் மா.வீரம்மாள் மாயகிருஷ்ணன், ஜெ.மாசி, கிளைக் கழக செயலாளர் ச.கோதண்டம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வரவேற்புரை : எம்.மகேஸ்வரி (மூர்த்தி ஊராட்சி மன்ற தலைவர் மருதம்)

இக்கூட்டத்தில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் திருவாரூர் த.ஜெயராமன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான சிறுவேடல் க.செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் தலைமை கழக மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து ஊராட்சி பேரூர் வார்டு கிளைக் கழகங்களில் இருந்தும் பெரும் திரளாக கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இதற்கான ஏற்பாடுகளை உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர் என். எஸ். பாரிவள்ளல் ஆகியோர் செய்து வருகின்றனர்.

### பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் தலைமை! நே.சிற்றரசு – தயாநிதிமாறன் எம்.பி. – எம்.கே.மோகன் பங்கேற்பு!

# அண்ணாநகர் தெற்கு சாதனை விளக்க பொதுக் கூட்டம்!

## த.ஆதித்யன் – மு.முஸ்தாக் சிறப்புரை!

சென்னை, மே 10-

சென்னை மேற்கு மாவட்ட அண்ணா நகர் தெற்கு பகுதி கழகம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நாளை (11-05-2025) அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னிலை: ஏ.கே. மூர்த்தி, ஆர்.எஸ்.கில்பர்ட், பானுமதி கிருஷ்ணசாமி.

வரவேற்பு: ந.அதியமான் இரா.பொன்னுரங்கம் ப.மகேஷ் ராஜா இரா. நவீந்திரகுமார்

திராவிட மாடல் அரசின் சாதனைகளை முழுங்கி சிறப்புரை ஆற்றுவோர்

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசுஎம்.சி.

தலைமை கழக பேச்சாளர் த.ஆதித்யன் மற்றும் இளம் பேச்சாளர் மு.முஸ்தாக் மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன்

அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன் எம்.எல்.ஏ.,

மாநில தகவல் தொழில் நுட்ப அணியின் துணை செயலாளர் கார்த்திக் மோகன் தொகுதி பொறுப்பாளர் வழக்குரைஞர் தமிழன் பிரசன்னா சந்திரபாபு சி.சேரன் ஏ.டி முருகன் காரத்தே அனந்தன் மற்றும் இரானி ரவிச்சந்திரன் வழக்கறிஞர் வி.நன்மாறன் ஆனந்த குமார் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர் ஆர் என் துரை, வி எஸ் கலை ஏ. சங்கீதா ஏஸ் அகஸ்டின் பாபு ஐ.கென்னடி, மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள்

அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் வட்ட அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தின் மூத்த முன்னோடிகள் பாக முகவர்கள் அனைவரும் வருக வருக அன்புடன் வரவேற்கிறது.

நன்றியுரை: தெ.கருணாநிதி, வி.எம்.சிவா.





மாதவரம் வடக்கு பகுதி திமு கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் மாத்தூர் 19 வது வட்டம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநில உரிமைகளை உச்ச நீதிமன்றம் வரை சென்று மீட்டெடுத்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.பகுதி அவைத்தலைவர் வி. திராவிடவீரன் தலைமையில் வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்றார். கே. அங்குசாமி, இ.கண்ணப்பன்,கே. கருணாகரன்,பி.எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், க. காசிநாதன், நா. மோகன் குமார் நாகூரார், கே. செல்வன், ஜிம் ராஜா, வி. கார்த்திகேயன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு உள்ளிட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள். பி. நிர்மல் குமார் நன்றி கூறினார்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# திருச்செங்கோடு வடக்கு - திருச்செங்கோடு தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் திருச்செங்கோடு கிழக்கு - திருச்செங்கோடு மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - ஒன்றிய, நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் – அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட, **திருச்செங்கோடு ஒன்றியம், திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு;

திருச்செங்கோடு நகரம் **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் – **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் அமையும்.

**திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்:** 1. டி.கைலாசம்பாளையம், 2.டி.புதுப்பாளையம், 3. சித்தாளந்தூர், 4. தேவனாங்குறிச்சி, 5.கருமாபுரம், 6. திருமங்கலம், 7. கருவேப்பம்பட்டி, 8. புதுபுளியம்பட்டி, 9. ஒ.இராஜாபாளையம், 10. தோக்கவாடி, 11. டி.கவுண்டம்பாளையம், 12.வரகூராம்பட்டி, 13. வட்டூர் ஆகிய 13 ஊராட்சிகள்.

**திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்:** 1. ஆண்டிபாளையம், 2. அனிமூர், 3. சிறுமொளசி, 4. ஏ.இறையமங்கலம், 5. எஸ்.இறையமங்கலம், 6. பிரிதி, 7. ஏமப்பள்ளி, 8. மொளசி, 9. சிக்கநாய்க்கன்பாளையம், 10. பட்லூர், ஆகிய 10 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : ஜி.தங்கவேல், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

**திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : தாமரைச்செல்வன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**திருச்செங்கோடு கிழக்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15, 16, 25, 26, 27, 32, 33 ஆகிய 17 வார்டுகள்.

**திருச்செங்கோடு மேற்கு நகரம் :** 7, 8, 9, 10, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 28, 29, 30, 31 ஆகிய 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருச்செங்கோடு கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : டி. கார்த்திகேயன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**திருச்செங்கோடு மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : ஆர். நடேசன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம்**

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **ஆனங்கூர், தண்ணீர் பந்தல்பாளையம், மோடமங்கலம் ஆகிய 3 ஊராட்சிகள் பள்ளிபாளையம் மத்திய ஒன்றியத்தில்** செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 09.05.2025


**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில் நடைபெறும் பேரணியில்

# திருவள்ளூர் ஒருங்கிணைத்த மாவட்ட தி.மு.க.வினர் - மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## அமைச்சர் சா.மு.நாசர் - திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கூட்டறிக்கை!





தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கும் அறிக்கையில், பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கும் தீவிரவாத தாக்குதல்களுக்கும் எதிராக வீரத்துடன் போர் நடத்தி வரும் இந்திய ராணுவத்திற்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது.

அதனை வெளிப்படுத்தும் வகையில், ஒரு பேரணியை இன்று (10.05.2025 – சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் முன்னாள் படைவீரர்கள், அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்குபெறும் பேரணி நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

மேலும் இந்த பேரணி தீவுத்திடலில் அருகே உள்ள போர் நினைவுச்சின்னம் அருகில் நிறைவு பெறும் என்றும்.

இந்த பேரணி இந்திய ராணுவத்தின் வீரத்தையும் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றுவதற்கும். தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்த பேரணியில் பங்கேற்று, நமது ராணுவத்திற்கு ஆதரவு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

எனவே தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவை ஏற்று திருவள்ளூர் ஒருங்கிணைத்த மாவட்டத்திற்கு உட்பட்ட தி.மு.க.வினர், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக பேரணியில் பங்கேற்பீர்!

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர் – திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**
செயலாளர் – திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

**வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்**
பொறுப்பாளர் – திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



கழகத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தலுக்கு இணங்கவும் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கோடை வெப்பத்தைத் தணிக்கும் வகையில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், எழும்பூர் தொகுதி, 99வது வட்டம், புரசைவாக்கம் நெடுஞ்சாலைசுந்தரம் தெரு சந்திப்பு, அடையாறு ஆனந்தபவன் எதிரில் தண்ணீர்ப் பந்தலைத் திறந்துவைத்து, இளநீர், தர்பூசணி. கிர்ணிப் பழம், வெள்ளரி, மோர், குளிர் பானங்கள் உள்ளிட்ட நீர்ச்சத்து கொண்ட உணவுப் பொருட்களைப் பொதுமக்களுக்கு வழங்கினார்.